**மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001.**

# கல்வி மொபைல் செயலிகள் உருவாக்கும் உலக சாதனை முயற்சி

******

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயற்சி நிறுவனம், இராசிபுரம் ரோட்டரி சங்கம், இராசிபுரம் இன்னர்வீல் சங்கம் மற்றும் பாண்டிச்சேரி ஆல் இந்தியா வோர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் இணைந்து மொபைல் கல்வி செயலிகள் உருவாக்கத்தில் உலக சாதனைக்கான நிகழ்ச்சி 21.6.2025 அன்று நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

உலக சாதனை நிகழ்ச்சியின் தொடக்கவிழாவில் நத்துக்குளிப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் இரா. சந்திரசேகரன் வரவேற்றார். பாண்டிச்சேரி, ஆல் இந்தியா வோர்ல்ட் ரெகார்ட்ஸ் நிறுவன வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினார். இராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் முருகானந்தம் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

ஆசிரியர்களுக்கான மொபைல் கல்விச் செயலிகள் உருவாக்கத்திற்கான அறிமுகப் பயிற்சியை சேலம் மாவட்டம், பாகல்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ப. அருளானந்தம் வழங்கினார். இப்பயிற்சிக்கு கொல்லிமலை, நத்துக்குளிப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் இரா. சந்திரசேகரன் மதியுரைஞராக (mentor) செயல்பட்டு வருகிறார். இப்பயிற்சியைத் தொடர்ந்து கடந்த ஒரு மாத காலமாக ஆசிரியர்கள் கல்விச் செயலிகளை வீட்டிலிருந்தபடியே உருவாகக்கி வருகிறார்கள்.

ஆசிரியர்களுக்கான மொபைல் கல்விச் செயலிகள் உருவாகத்தில் 4 நாள் கடந்த மே மாதம் இந்நிறுவனத்தில் கொடுக்கப்பட்டது.

மொபைல் கல்விச் செயலிகள் உருவாக்க உலக சாதனை விழாவில் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் தலைமையுரையில் தொடக்க நிலைப் பயிற்சியின் போது ஆசிரியர்கள் நம்மால் செயலிகளை உருவாக்க முடியுமா எனப் பயந்தனர் என்றும், தொடர்ப் பயிற்சியால் இப்போது நம்மாலும் செயலிகளை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை ஆசிரியர்கள் பெற்றுள்ளதால், தொடர்ந்து கடினமானப் பாடப்பொருட்களை எளிதாகப் புரிந்து கொள்ளும்படி செயலிகளை உருவாக்குவது, கல்வி விளையாட்டு செயலிகளை தயாரிப்பது, மதிப்பீட்டிற்கான பிரத்யோகமானச் செயலிகளை வடிவமைப்பது போன்றவற்றில் ஆசிரியர்கள் தொடர்ந்து ஈடுபடுவதற்குத் தேவையானத் திறன்களைப் பெற்றுள்ளனர் என்றும் ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும், மாணவர்களின் கற்றலுக்கும், ஆசிரியர்கள் உருவாக்கியச் செயலிகள் உதவும் என்றும் கூறினார்.

நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களைச் சார்ந்த 27 அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மொபைல் கல்வி செயலி உருவாக்க உலக சாதனை நிகழ்வில் கலந்து கொண்டு சாய்சதுரத்தின் பரப்பளவைக்

கணக்கிடுதல், இரண்டு எண்களின் கூடுதல் மற்றும் கழித்தல், அடர்த்தியைக் கண்டறிதல், அளவுகோலின் பரப்பளவை கணக்கிடுதல், செவ்வகத்தின் பரப்பளவை கண்டறிதல், வேகத்தைக் கண்டறிதல், லென்சின் குவியத்தொலைவைக் கண்டறிதல், திசை வேகத்தைக் கண்டறிதல், விட்டத்தைக் கணக்கிடுதல், பேச்சொலியை எழுத்துருவாக மாற்றுதல், எண்களின் வர்க்கத்தைக் கண்டறிதல், வட்டத்தின் சுற்றளவைக் கண்டறிதல், கனசதுரத்தின் மொத்த மேற்பரப்பளவைக் கண்டறிதல், கனசதுரத்தின் கனஅளவைக் கணக்கிடுதல், கோளத்தின் மொத்த புறப்பரப்பைக் கண்டறிதல், மின்னோட்டத்தைக் கணக்கிடுதல், இணைக்கரத்தின் பரப்பளைவைக் கண்டறிதல், நியூட்டனின் இரண்டாம் விதியைக் கணக்கிடுதல், நுண்ணறிவு ஈவு மதிப்பைக் கணக்கிடுதல், லென்சின் திறனைக் கணக்கிடுதல், வெப்பநிலை மாற்றத்தை கணக்கிடுதல், எழுத்துருக்களை பேச்சொலியாக மாற்றுதல், முன்னி, தொடரி அறிதல், அழுத்தத்தைக் கணக்கிடுதல் போன்ற செயலிகளை மிகக்குறைந்த நேரத்தில் உருவாக்கினர்.

தென்காசி, ஜோகோ கணினி மென்பொருள் உருவாக்க நிறுவனத்தின் மேலாளர் இராஜேஸ்கண்ணன் சிறப்புப் பார்வையாளராக கலந்து கொண்டார். ரோட்டரி மகிழ்ச்சிப் பள்ளிகள் தலைவர் க.சே. கருணாகர பன்னீர்செல்வம் மற்றும் இராசிபுரம் ரோட்டரி சங்க செயலாளர் இராமசாமி போன்றார் வாழ்த்துரை வழங்கினர். இராசிபுரம் இன்னர்வீல் சங்கத் தலைவர் கி. சுதா மனோகரன் நன்றியுரை வழங்கினார்.